பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 10 2023 **SUNDAY** 6 30 **PM**

தலைப்புச் செய்திகள்

1. மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் சாகர் பரிக்ரமா கடலோர யாத்திரை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய மீன்வளத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.
2. இஸ்ரேல் தலைநகர் **Tel Aviv** மற்றும் இந்தியா இடையேயான விமான சேவை இம்மாதம் 14ஆம் தேதிவரை ரத்து செய்யப்பட்டுள்ளதாக ஏர் இண்டியா நிறுவனம் அறிவித்துள்ளது.
3. தமிழகத்தில் உள்ளாட்சித் துறை மூலம் 24 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. கே.என். நேரு, தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்தில் கோவை, நீலகிரி உள்ளிட்ட 13 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணிக்கு 200 ரன் என்ற வெற்றி இலக்கை ஆஸ்திரேலியா நிர்யிணயித்துள்ளது.

**>>>>><<<<<**

தமிழக மீனவர்களின் மேம்பாட்டிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு 126 கோடி ரூபாய் மதிப்பிலான கடல்பாசி திட்டத்தை கொண்டு வந்துள்ளதாக மத்திய மீன்வளத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

நாடு முழுவதும் மேற்கொண்டுவரும் சாகர் பரிக்கிரமா என்ற கடலோர பயணத்தின் ஒரு பகுதியாக இன்று மாலை கடலூரில் மீனவர்களை மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலாவுடன் இணைந்து சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது பேசுகையில், மீனவர்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் சாகர் பரிக்ரமா கடலோர யாத்திரை திட்டத்திற்கு மீன்வளத்துறை ஏற்பாடு செய்துள்ளதாக இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

தமிழகத்தில் உள்ளாட்சித் துறைக்கு 24 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் நடைபெற்று வருவதாக நகராட்சி மற்றும் நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சியில் 200 கோடி ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டப் பணிகளை, திறந்து வைத்த பின், செய்தியாளர்களிடம் பேசிய அவர், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு மட்டும் இந்த நிதியில் 14 ஆயிரம் கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, தென்தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் தூத்துக்குடி ஒரு மையமாக திகழ்கிறது என்று கூறினார்.

இங்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ள பர்னிச்சர் பூங்காவில், பல தொழில் நிறுவனங்கள் முதலீடு செய்ய ஆர்வமுடன் இருப்பதாக தெரிவித்தார்.

இதனால், இம்மாவட்டத்தில் தொழில் வேலை வாய்ப்புகள் பெருகும் என்றும் அவர் கூறினார்.

பசுமை அமோனியா திட்டம் உள்ளிட்ட பல்வேறு தொழில்வளர்ச்சி திட்டங்களும் தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

ஓசூரை அடுத்த கர்நாடக எல்லைப்பகுதியில் உள்ள அத்திப்பள்ளி பட்டாசுக் கடையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமிழக அரசின் சார்பில் தலா 3 லட்சம் ரூபாயை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், இன்று வழங்கினார்.

இந்த விபத்தில் பலத்த காயமடைந்து பெங்களூருவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இரண்டு பேருக்கு தலா 1 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் அவர் வழங்கினார்.

இதனிடையே, கர்நாடக அரசு, இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது.

இதனை தெரிவித்த அம்மாநில துணை முதலமைச்சர் திரு. டி.கே. சிவக்குமார், இந்த விபத்து குறித்து விரிவான விசாரணைக்கு முதலமைச்சர் திரு. சித்தராமையா உத்தரவிட்டிருப்பதாக தெரிவித்தார்.

பட்டாசு கடையின் உரிமையாளர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

>>>>><<<<<

இஸ்ரேல் தலைநகர் **Tel Aviv** மற்றும் இந்தியா இடையேயான விமான சேவை இம்மாதம் 14ஆம் தேதிவரை ரத்து செய்யப்பட்டுள்ளதாக ஏர் இண்டியா நிறுவனம் அறிவித்துள்ளது

இதுதொடர்பாக அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் பயணிகள் மற்றும் விமானிகளின் பாதுகாப்பு கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நவராத்திரியை ஒட்டி, பல்வேறு வடிவங்களில் கைவினைக் கலைஞர்களால் செய்யப்பட்டுள்ள பொம்மைகள் அவர்களின் வாழ்வாதாரத்தை ஊக்கப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

கைவினைக் கலைஞர்களிடமிருந்து பெறப்பட்ட பாரம்பரியத்தை உணர்த்தும் பொம்மைகளும், நாட்டின் வளர்ச்சி மற்றும் அறிவியலை மக்களிடையே கொண்டு செல்லும் பொம்மைகளும் சேலத்தில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கொழு கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

தமிழகத்தைச் சேர்ந்த 90 சதவீத கைவினை தொழிலாளர்களும், மற்ற மாநிலங்களைச் சேர்ந்த 10 சதவீத தொழிலாளர்களும் இதனால் பயன்பெறுவதாக பூம்புகார் விற்பனை நிலைய மேலாளர் திரு. நரேந்திர போஸ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தில் கோவை, நீலகிரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் உள்ளிட்ட 13 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

சென்னைக்கு குடிநீர் வழங்கும், 24 அடி கொள்ளளவு கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் மட்டம் 22 அடியை எட்டியதை அடுத்து, பாதுகாப்பு கருதி வினாடிக்கு 100 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

உபரிநீர் வெளியேறும் வாய்க்கால் அமைந்துள்ள கிராமங்களான சிறுகளத்தூர், காவனூர், குன்றத்தூர், வழுதியம்பேடு மற்றும் அடையாறு ஆற்றின் இருபுறமும் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

கரையோரப் பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

நீர்வரத்து அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதலான நீர் வெளியேற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

சென்னை சிந்தாதிரிப்பேட்டை, நாவலர் நெடுஞ்செழியன் நகர் உட்பட 9 திட்டப் பகுதிகளில் 556 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 ஆயிரத்து 238 அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கு மாநில அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

>>>>><<<<<

மதுரையில் இன்று நடைபெற்ற தேசிய அளவிலான நாய் கண்காட்சியில் 55 வகையான நாய்கள் பங்கேற்றன.

>>>>><<<<<

உதகை அரசு தாவரவியல் பூங்காவிற்கு வரும் மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியவர்கள் பூங்காவை எளிதில் கண்டு ரசிக்கும் வகையில் பேட்டரி கார் சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

திருப்பூர், தென்காசி, செங்கல்பட்டு மாவட்டங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**>>>>><<<<<**

விளையாட்டுச் செய்திகள்

உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணிக்கு 200 ரன் என்ற வெற்றி இலக்கை ஆஸ்திரேலியா நிர்யிணயித்துள்ளது.

சென்னையில் தற்போது நடைபெற்று வரும் ஆட்டத்தில் முன்னதாக டாஸ் வென்ற ஆஸ்திரேலியா, முதலில் பேட் செய்ய தீர்மானித்தது. அந்த அணி 49 புள்ளி மூன்று ஓவரிலேயே அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 199 ரன் எடுத்தது.

**>>>>><<<<<**

ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் நிறைவு விழா வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் தற்போது நடைபெற்று வருகிறது.

சீனாவின் **Hangzhou**-வில் நடைபெறும் இந்த நிறைவு விழா அணிவகுப்பில் இந்தியாவின் தேசியக்கொடியை ஹாக்கி அணியின் கோல்கீப்பர் **PR Shreejesh** ஏந்திச் சென்றார்.

**>>>>>END<<<<<**